Koviloor Digital Library

5/2

ஸ்ரீ ராம நாம வங்கியின்

நாம நிதி
க்ஷேம நிதி

ACC No 44647
Q1
KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44647

நாம சகாப்தத்தில் ஓர் நாம ஆண்டு
31.01.2018 முதல் 30.01.2019 வரை
நாம யக்ருத்தில் வெளியிடப்பட்ட மலர்

Koviloor Digital Library

ஸ்ரீ நாம நாம வங்கி ஓர் நாம இயக்கம்

1. ராம கிருஷ்ண என்ற அவதாரங்களால் ஜனங்களை கரையேற்ற முடியவில்லை என்றே நாம அவதாரம் ஏற்பட்டது. அதுவே என்னிடத்திலிருந்து விலகாமல் இருக்கட்டும்.

2. திருப்பிச் சொன்ன திருடனையே ஆதிகவியாக்கிய "ராம" நாமம் என்னிடமிருந்து பிரியாமல் இருக்கட்டும்.

3. பிறன்மனை விழைந்து மாபாதகம் செய்தவனின் மரணத் தருவாயில் தர்சனம் அளித்து அவனை கரையேற்றிய நாமம் என்னிடம் எப்போதும் தங்கி இருக்கட்டும்.

4. பொருளறியாமல் உச்சரித்தவாறிருந்த வேடுவ ஸ்திரீக்கு அதற்குரியவனையே வரவழைத்த நாமம் என்னுடனேயே குடியிருக்கட்டும்.

5. ஏற்கனவே பரசுராமன் போன்றோருக்கு பெயரிடப்பட்டிருந்ததும், ப்ரும்மஞானி வசிஷ்டரால் ஜபிக்கப்பட்டிருந்ததுமான இதற்கு ஆசைப்பட்டு பிறவியெடுத்தவனுக்கு சூட்டப்பட்டதுமான நாமம் என்னிடம் நீங்காமல் இருக்கட்டும்.

6. பிரிந்த பிராட்டியை காணச் சென்ற மோதிர நாமமும், பெயருக்குரியோன் கரை கடக்க உதவியதுமான பாறை நாமங்களும், பிரிந்தவரை இணைத்ததுமான நாமம் கருணையினால் என்னிடம் பிரியாமல் இருக்கட்டும்.

7. முன்னால் ஓரவதாரம் (பரசுராமன்) உரிய அவதாரம் (ராமன்) பின்னால் ஓரவதாரம் (பலராமன்) என மூவரும் பெயர் தாங்கிய நாமம், என் மும்மலங்களை நீக்கி என்னிடம் நிரந்தரமாய் தங்கட்டும்.

8. ஆதிராமாயணம் ஓதியவன் ஆசைப்பட்டோருக்கு பிரித்து கொடுத்து எஞ்சிய ஈரெழுத்தை ஸதா ஸர்வகாலமும் தன்னிடம் வைத்துக் கொண்டவன் அருளால் அது என்னிடம் நிரந்தமாய் இருக்கட்டும்.

9. நாமம் அவதாரமான போது நாமத்துடன் அவ்வவதாரத்திற்கு ஸதாஸர்வ காலமும் சக்தியூட்ட அம்சாவதாரமாய் வந்தவன் கிருபையால் நாமம் என்னை விட்டும் பிரியாமல் இருக்கட்டும்.

10. நாமத்தை கடை பரப்பிக் கொண்டு சிரஞ்சீவியாய் தங்கி விட்டவன் கருணையினால் நாமம் என்னிடம் நீங்காமல் இருக்கட்டும்.

11. பரமேஸ்வரனாயும் அம்சமான ஆஞ்சநேயராகவும், வாயுவாம்சமாக பீமனாயும், ஆச்சாரியரம்சமான மத்வராயும், மீண்டும் வியாஸராயாராயும் தோன்றி தன்னைத் தானே 752 இடங்களில் பிரதிஷ்டை செய்து கொண்டு, இன்று நாமமாகவே கதவைத் தட்டிக் கொண்டு எழுந்தருளுவதுமான ராம நாமம் நிரந்தரமாய் என்னிடம் தங்கட்டும். எல்லோரையும் காக்கட்டும். எல்லோரிடமும் நாமம் பிரியாமல் இருக்க அருளட்டும்.

★ சுபம் ★

Koviloor Digital Library

512

எல்லோரையும் நல்லோராக்கும்...

ஸ்ரீ ராம நாம வங்கி

சுதந்திரமாக நாமப்பணிகள் செய்து வரும் நாம அடிமைகள்

ஸ்ரீ பகவான் நாம பப்ளிகேஷன்ஸ் | அன்னதான ஸமாஜம்

'RAMA MANTHIRAM', No. 2/3, Vinayagam Street, West Mambalam, Chennai - 600 033.
Ph :- 044 24893736/35 Cell :- 9445693295.Website : www.namalayam.org e-mail:- ramamanthiram@gmail.com

இணைவீர் இறை நாம வங்கியுடன்

- 1995 முதல் செயல்படும் வங்கி
- ஸ்ரீபோதேந்திர ஸ்வாமிகளின் நாம சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனம்
- ஸ்ரீ மஹா பெரியவாளின் வழியான நாமம் எழுதுவதை இயக்கமாக ஆக்கிய வங்கி
- சுமார் 8 இடங்களிலிருந்து செயல்படும் கிளைகளை கொண்டுள்ள வங்கி
- நாமம் சேகரம் செய்யும் வங்கி.
- 8000 கோடி நாமம் சேகரம் செய்துள்ளவங்கி.
- இரண்டு கோடி நபர்களை சென்றடைந்துள்ள வங்கி.
- சேகரித்த நாமங்களை ப்ரதிஷ்டை செய்யும் வங்கி
- நாமங்களுடன் யாத்திரைகளை நடத்தும் வங்கி
- 6 பாத யாத்திரைகளை நடத்தியுள்ள வங்கி
- 44 யாத்திரைகள் நடந்துள்ளது.
- 6 மாதம் பாத யாத்திரை செய்த வங்கி
- 725 நாட்கள் யாத்திரை செய்துள்ள வங்கி.
- 19 மாநிலங்களில் யாத்திரை செய்துள்ள வங்கி
- சுமார் 87,084 கி.மீ யாத்திரை செய்துள்ள வங்கி
- 992 நாம ப்ரதிஷ்டைகளை செய்துள்ள வங்கி
- 11 மாநிலங்களில் நாம ப்ரதிஷ்டை செய்துள்ள வங்கி
- அயோத்தி ப்ரயாகை, சித்ரகூடம், காசி, ப்ருந்தாவனம் ஆகிய இடங்களில் பாதயாத்திரையாகச் சென்று ப்ரதிஷ்டை செய்துள்ள வங்கி
- சுமார் 700 இல்லங்களுக்கு மேல் ப்ரதிஷ்டை செய்துள்ள வங்கி
- இரண்டு இடத்தில் 1000 கோடியை நிறுவியுள்ள வங்கி.
- 4000 கோடி வைக்கும் படியாக "திருநாமகேந்திரத்தை" கட்டி அதில் தற்போது 1000 கோடியை ப்ரதிஷ்டை செய்துள்ள வங்கி.
- தற்போது மேலும் இரண்டு இடங்களில் 1000 கோடியை ஸ்தாபனம் செய்ய முயற்சிக்கும் வங்கி
- பாரத தேசத்தை நாமத்துடன் வலம் வந்துள்ள வங்கி
- 1000 கோடியுடன் தமிழ் நாட்டை வலம் வந்த வங்கி.

Koviloor Digital Library

- சுமார் 2442 கிராமங்களில் நேரிடையாக ப்ரசாரம் செய்துள்ள வங்கி.
- ஒரே கிராமத்தில் 25 ப்ரதிஷ்டைக்கு மேல் செய்துள்ள வங்கி
- சுமார் 500க்கும் மேற்பட்ட நாம உஞ்சவ்ருத்திகளை செய்துள்ள வங்கி
- சுமார் 5000க்கும் மேற்பட்ட நாம முகாம்களை நடத்தியுள்ள வங்கி.
- நாமம் வெற்றியடைந்தது என்ற தன் பார்வையில் அதற்காக 54 உயரம் கொண்ட கருங்கல்லால் ஆன நாம கீர்த்தி ஸ்தம்பத்தை எழுப்பி விரைவில் ப்ரதிஷ்டை செய்யவிருக்கும் வங்கி.
- நாமத்தை மூச்சாகவும், இருதயமாகவும் கொண்டு செயல்படும் வங்கி.
- அன்னதானமும், ப்ரசுரங்களும் இதன் இரு கண்கள் போன்றவை.
- எளிமையான, நாமத்திற்கு அனுகூலமான அன்னம் பாலிப்பதை வழக்கமாக கொண்டுள்ள **அன்னதான ஸமாஜம்** இவ்வங்கியின் பிரிவு.
- அரியதும், பழையதும், பெரியதுமான கிரந்தங்களையும், நாம சித்தாந்த புத்தகங்களையும்,மொழியாக்கம், மொழிமாற்றம் ஆகிய பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டு, **பகவன் நாம பப்ளிகேஷன்** என்ற பிரிவின் பெயரில் தயாரிக்கப்படும் புத்தங்களை தகுந்த முறையில் **நாம பிரசாத்திற்காக** விநியோகிக்கும் வங்கி.
- தமிழில் மூலம், வசனம், மூலமும் உரையும், பத அர்த்தங்கள், நாம சித்தாந்தம், பஜனை புத்தங்கள், அர்த்தத்துடன், திவ்ய சரித்திரங்களை தயாரித்துள்ள வங்கி.
- பொது விநியோகத்திற்கு என அபூர்வமான விஷயங்களை சிறிய வெளியீடுகளாக சுமார் 170 தலைப்புகளில் தன்னகத்தே கொண்டுள்ள வங்கி
- சுமார் 500க்கும் மேற்பட்ட தலைப்புகளில் புத்தகங்கள் தயாரித்து தற்போது 470 தலைப்புகளை தன்னிடத்தே கொண்டுள்ள வங்கி.
- எங்களுடன் இணைவீர், நாமத்தினை சேகரிப்போம், நாடும் நாமும் நலம் பெறுவோம் வாரீர்.

Contribute Liberally

நாம சகாப்தத்தில் ஓர் நாம ஆண்டு

31-01-2018 To 30-01.2019 **365 நாட்களுக்கு அன்னதானம்** **நாம கைங்கர்யம்**

அன்னதானம் ஒரு நாள்	₹12,000
அன்னதானம் மஹாநைவேத்யம்	₹ 6000
க்ரந்தபோஷகர்	₹ 3000
நாம போஷகர்	₹ 2300
நாம பாதுகாப்பு	₹ 700
நாம அலங்காரம்	₹ 1000
நாம பெட்டகம்	₹ 5000

தங்களால் இயன்ற எந்த உதவியும்

Cheques & Drafts may be sent to :
SRI RAMA NAMA BANK,
No. 2/3, Vinayagam Street,
West Mambalam, Chennai - 600 033.
Ph :- 044 24893736

SRI RAMA NAMA BANK- ICICI BANK AC. No. 602301187406 - IFSC Code: ICIC0006023
SRI RAMA NAMA BANK- K.V.B.BANK AC. No. 1278155000004971 - IFSC Code: KVBL0001278

31.01.2018 முதல் 30.01.2019 வரை ஓர் ஆண்டு நாம உத்சவம் நடக்கிறது.

Koviloor Digital Library

நாம நிதி க்ஷேம நிதி

- நாம ஜபம் எதுவரை செய்யப்படலாம்? எதுவரை மூச்சுக் காற்று சென்று விடுகிறதோ அல்லது நினைவு இருக்கிறதோ அது வரை நாம ஸ்மரணம் கூறப்பட்ட முறையில் நாம ஸ்மரணம் செய்ய வேண்டும். அவனுக்கு நன்மை உண்டாகவே செய்யும்.
- நாம ஜபம் எவ்வாறு செய்வது என்று கேட்பதாவது 'பேடா' (தின்பண்டம்) எவ்வாறு சாப்பிடுவது என்பது போன்றது. 'பேடா' எந்த வகையால் சாப்பிட்டாலும் இனிப்பாகவே இருக்கிறது என்பது போல் நாம ஸ்மரணம் எந்த வகையால் செய்தாலும் தன் மகிமையை வெளிப்படுத்துகிறது.
- நாம ஸ்மரணம் செய்யும் போது மனம் ஏன் ஒன்றுவதில்லை? உள்ளத்தின் ஒன்றிப் பிற்காகவே நாம ஸ்மரணம் அவசியமாகிறது. மனம் ஒருங்கிணையாவிடில் கவலையில்லை, ஆனால் நாம ஸ்மரணத்தை விடக்கூடாது.
- நாம ஸ்மரணம் செய்யும் சமயம் ரூப தியானம் அவசியமா? உண்மையில் நாமம்–ரூபம் இரண்டிலும் வேறுபாடில்லை, ஆனால் நாமமானது உருவத்திற்கு முன்பே இருக்கிறது, பிறகும் இருக்கிறது, நாமம் ரூபத்தை விஸ்தாரம் செய்தவாறிருக்கிறது.
- தானத்தில் சிறந்தது அன்னதானம். உபாசனையில் சிறந்த உபாசனை ஸகுண உபாசனை, (உருவ வழிபாடு) சாதனத்தில் சிறந்த சாதனம் நாம–ஸ்மரணமாகும்.
- நாமத்திடம் பிரேமை அமைவதற்கு உண்மையான பற்று தேவை. கணவனுக்கு பகவானிடம் சிறிதும் பற்றில்லை. அதனால் மனைவி நாம–ஸ்மரணத்தை விட வேண்டிய அவசியம் ஏதுமில்லை. அவள் நாம ஸ்மரணம் செய்தால் தர்மத்தை விட்டதாகாது. பதிலாக குடும்ப வாழ்வு சுகமயமாகும். நாமத்தின் சஹவாசத்தாலேயே நாமத்திடம் பிரேமை அமையும்.
- நாம ஸ்மரணத்திடம் பிரேமை உண்டாவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று சாதுக்களுக்கு அது பிடிக்கும் என்பதால், இரண்டாவது, நாம ஸ்மரணத்தாலேயே நமக்கு நன்மை என்பதால்
- யார் அதிகம் செய்தவனோ அவனும் ஐயம் காரணமாக பயனின்றி தோற்று விடுகிறான். நாம் நாம ஸ்மரணத்தை எந்த ஒரு நிலையிலும் விடமாட்டோம் என்று சபதம் செய்ததும் நமது மனம் ஐயமற்றதாகி விடும்.

Koviloor Digital Library

- நாமமே குடும்ப வாழ்க்கையை சுகமாக்கும் சாதனமாகும்
- எப்போதும் கவனமாக இருக்க வேண்டும். பகவானை அகண்டமாக ஸ்மரணம் செய்ய வேண்டும்.
- யார் நாம ஸ்மரணம் செய்கிறானோ அவனுக்கு சரீர சுக-துக்கத்தின் நினைவு இருக்காது. அவன் மகிழ்ச்சியாக இருப்பான்.
- ராம ராம என்று கூறாமல் ராமன் கிடைக்க முடியாது என்று கூறலாம்
- நாமம் நற் செயல்களின் அடித்தளமாகும், சிறியதுமாகும்
- நற் காரியத்தின் கடைசி விளைவு பகவன் நாமத்திடம் பிரேமை அமைவதிலிருக்க வேண்டும்.
- நாம ஸ்மரணத்தில் எந்தத் தடையும் வருவதில்லை.
- நாம ஸ்மரணம் செய்யத் தொடங்குபவனின் வெளியே திரியும் செயல் மெல்ல மெல்ல குறைந்து வரும்.
- நாம ஸ்மரணத்தில் இருப்பதற்குப் பொருள் நினைவோடிருத்தல்.
- நாம் நாம ஸ்மரணம் செய்து கொண்டே யிருந்தால் சந்த்கள் தாமே நம்மைத் தேடுவார்கள். நாம் சந்த்களைத் தேட வேண்டிய அவசியமில்லை.
- நாமத்திற்காகவே நாமம் ஜபிப்போம்.
- தண்ணீர் சரீரத்தின் ஜீவனாவது போல் நாம ஸ்மரணம் மனதிற்கு ஜீவன் ஆகும்.
- நாம ஸ்மரணம் அதிகமானால் காரியம் ஆகி விட்டது என்று அறிந்து கொள்வோம்..
- நாம ஸ்மரணத்தை நிஷ்டையுடன் செய்ய வேண்டும். நாம ஸ்மரணத்தால் பகவான் கிடைப்பார் என்னும் ச்ரத்தை இருக்க வேண்டும். இவ்வகையான நாம ஸ்மரணத்தை நிஷ்டையுள்ள நாம ஸ்மரணம் என்று கூறுகிறார்கள்.
- பகவானின் ரூபம் ஆனந்தமயமானது. நாம ஸ்மரணத்தால் பகவானுடைய அருகாமை கிடைத்து விடுகிறது.
- பகவானின் ஸ்மரணம் செய்தவாறு தகுதியுடையதாகத் தோன்றுவதை பகவானின் விருப்பப்படி நடக்கிறது என்று நினைத்து காரியம் செய்வோம். இந்த முறையில் பணி செய்பவனுக்கு அவசியம் திருப்தி உண்டாகும்.
- நாமம் எங்கோ ராமன் அங்கே.
- பிரபுவின் திருவடிகளில் தன் மனதை லயிக்கச் செய்ய வேண்டும். இதைச் செய்தால் அதிகம், மற்ற கஷ்டங்களை ஏற்கும் அவசியம் கிடையாது

Koviloor Digital Library

- நாமத்தின் அனுபவமாவது அதைத் தவிர வேறு எதையும் அபேக்ஷிக்காதது ஆகும். அதாவது நாம ஸ்மரணத்தால் நாம் வேறு ஒரு விஷயத்தை யடைய வேண்டும் என்பதை மறந்து விடுதலாகும்.
- பவக்கடலை கடப்பதற்கு நாமமே ஒரே சாதனம்.
- உயிர் வாழ்வதற்காக மனிதன் மூச்சு விடுவது அவசியமாகிறது. அது போல் பகவானை சேர ஒவ்வொரு மூச்சுக் காற்றுடனும் நாம ஸ்மரணம் முற்றிலும் அவசியமாகிறது.
- நாம ஸ்மரணம் பயனை எதிர்பார்ப்பதாக இருக்கக் கூடாது.
- உத்தமமான விதை என்பதற்குப் பொருள் நாமத்திற்காக நாமம் கூறுவதாகும்.
- தூய உள்ளத்தோடு நாம ஸ்மரணம் செய்யப்பட்டால் பகவத் கிருபையின் அனுபவம் உண்டாகும்.
- ஒரே சமயம் அதிக சாதனை செய்வதற்கு பதிலாக, சிறிதளவாயினும்-நித்தியமாக, குறிப்பிட்ட சமயத்தில், தீர்மானித்த இடத்தில் நாம ஸ்மரண சாதனை செய்யப் படுமானால் அதன் விளைவு அதிகமாகிறது.
- விதி மற்றும் கிரகங்களின் ஆளுமை உடல் வரையே உள்ளது. மனதால் பஜிப்பதில் அது தடையாகாது.
- அனுசந்தானத்திற்கு நிரந்தரமாக நாம ஸ்மரணம் செய்ய வேண்டும்
- நாம ஸ்மரணம் குடும்ப வாழ்விற்கு சுக மளிப்பதாகும், அதற்காக அல்ல, அதன் பற்று குறைய வேண்டும் என்பதற்காக செய்ய வேண்டும்.
- பகவானுடைய அனுசந்தானம் நமது லக்ஷியமாகும். அதற்கேற்றவாறு நாம் மற்ற விஷயங்களைச் செய்வோம். இறுதி சமயம் திருந்துவதற்கு நாம ஸ்மரணம்.
- தீர்த்த ஸ்தானங்களில் நீராடுவதால்-பூஜை செய்வதால் மட்டும் பரமார்த்தம் கிட்டாது. பகவானிடம் பற்று உண்டாக நாம ஸ்மரணம் வேண்டும்.
- நாமம் பரமாத்மாவின் அருகில் போய்ச் சேரும் ராஜ பாட்டையாகும்.
- குதிரையின் கடிவாளத்தைப் பற்றி, சரியாக நடுவில் நின்று, அதற்கு சுற்றி ஓட கற்பிப்பது போல் நாம் நமது மனதை சரியாக பகவானின் திருவடிகளில் நிலைக்கச் செய்து உடலை குடும்ப வாழ்க்கையில் சுழலச் செய்ய வேண்டும்.
- கர்த்தாவாக இல்லாமல் நாம ஸ்மரணம் செய்வோம்.
- மனது பரமாத்மாவிடம் முடிவு செய்யப் பட வேண்டும், தேஹம் குடும்ப விஷயங்களில் ஈடுபடட்டும்.

Koviloor Digital Library

- நாமமே எல்லாவற்றையும் செய்யும்" என்னும் உறுதியான பாவம் வைத்து செயல்பட வேண்டும். ஆனால் பகவானுடைய அருளாலேயே வெற்றி உண்டாகும் என்ற பாவமும் அவசியம்.
- பரமாத்மா உபாதி இல்லாமல் இருப்பது போல நாமமும் உபாதி இல்லாதது.
- நாமம் இருக்கும் இடத்தில் பரமாத்மா இருக்கவே செய்கிறார்.
- நாம ஸ்மரணத்திடம் பிரேமை இருக்குமிடமாக அவனை கருதுவோம்.
- இன்றைய உலகில் நாமமே பகவானின் அவதாரமாகும்
- நாமத்தால் கலியின் இருப்பு அழிந்து விடுகிறது. ஆகவே நாம ஸ்மரணம் செய்பவருக்கு கலியின் தடை ஏற்படுவதில்லை.
- தேஹ புத்தியின் மறதிக்காக நாம ஸ்மரணம்
- 'ராம' ஸ்மரண மகிழ்ச்சி இல்லாமல் அகம்பாவம் அழிவதில்லை.
- நாம ஸ்மரணத்தால் நல்லறிவு அமைகிறது.
- நம் விருப்பத்திற்கு ஏற்றவாறு விஷயங்கள் ஆகவில்லை என்பது பகவானுடைய அருளே ஆகும்.
- நாம ஸ்மரணத்தால் நமது அவகுணங்கள் புரியும்.
- ஆத்ம சோதனை செய்து தன்னுள்ளே இருக்கும் அவகுணங்களின் விதையை வேரோடு களைவது ஒரு பெரிய சாதனமாகும். இது வெற்றி பெற நாம ஸ்மரணத்தைத் தவிர வேறு எந்த சாதனமும் கிடையாது.
- பகவானுடைய பெயரில் தான் வாசனையின் அழிவு உள்ளது. வாசனைகளின் அழிவு பகவானுடைய நாம ஸ்மரணத்தில் இருக்கிறது என்பது முழுமையான உண்மையாகும்.
- நாம் நல்ல நிலையில் இருக்கும் போது நாம ஸ்மரணம் அதிகமாக இருக்கிறது. அதில் சிறிது தடை உண்டானால் நமது கவனம் முழுவதும் தடை மீதே செல்கிறது. இதற்குக் காரணம் நாம் மேல் போக்காக நாம ஸ்மரணம் செய்வது தான்.
- நாம ஸ்மரணம் செய்யும் போது பரமாத்மாவைத் தவிர இவ்வுலகில் நமக்கு யாருமில்லை என்னும் திடமான ச்ரத்தை நம் மனதில் இருக்க வேண்டும். அந்த நிலையில் இருந்தால் இயற்கையில் ஒரு தடை வந்தாலும் நாம ஸ்மரணம் அகண்டமாக இருக்கும்.
- போகத்திலும் துக்கத்திலும் நேரத்தை வீணாக்காமல் பகவானிடம் கவனம் செலுத்த வேண்டும்.

Koviloor Digital Library

- பகவானையடைய சரணாகதியைத் தவிர வேறு எந்த வழியும் கிடையாது, சரணாகதிக்கு நாம ஸ்மரணம் போன்ற உத்தமமான வேறு உபாயம் இல்லை.
- அனன்ய தன்மை யில்லாமல் பகவானையடைய முடியாது. அதில் தான் பக்தியின் அமைப்பு உள்ளது.
- அவகாச சமயத்தை பகவத் சிந்தனையில் ஈடுபடுத்துவோம்.
- திருப்தியே உண்மையான அர்த்தத்தில் ஆனந்தத்தின் சங்கேதமாகும்.
- நாம ஸ்மரணம் போல் வேறு நன்மை கிடையாது.
- நாம ஸ்மரணத்தியில் மிகுந்த நம்பிக்கையே சாதனையில் அகண்ட உதவியாளனாகும். அதனாலேயே குடும்ப வாழ்வின் சிக்கலிலிருந்து விடுபட்டு விடலாம். பரமார்த்தத்திற்கு இதுவே சிறந்த வழியாகும்.
- பகவானுடைய பந்தனமே உண்மையான பந்தனம். அது நம்மை எல்லா பந்தனங்களிலிருந்தும் விடுவிக்கிறது.
- வாயால் நாம ஸ்மரணம், உடலால் பகவத் சேவை, உள்ளத்தில் பகவத் தியானம், மனதின் சமர்ப்பிக்கப் பட்ட பாவனை இவையே பகவத் சேவைக்கான சாதனங்களாகும். இதைத்தவிர வேறு சாதனம் இல்லை.
- நாம ஸ்மரணம் தவிர ஒரு கணமும் இருக்காதிருப்பதே விஷயம்.
- மாய வலையிலிருந்து (சுருக்கு) விடுபட நாம ஸ்மரணமே சாதனமாகும்.
- பிரபு ராமனிடம் நிரந்தர நினைவு வைத்து ஆனந்தமாக வாழ்வைக் கழிப்போம். விஷயத்தின் அலை மாயையின் நினைவாகும். நாம ஸ்மரணம் பகவத் ஸ்மரணமாகும்.
- நாமமே ஸத் ஸ்வரூபமாகும். நாமம் சாஸ்வதமானது. அது முதலில் இருந்தது, இப்போதும் இருக்கிறது. நாம் அழிந்த பிறகும் அது மீதமாக இருக்கும்.
- நாமம் சச்சிதானந்த ஸ்வரூபமானது. தூய பரமாத்ம ஸ்வரூபத்திற்கு மிகவும் நெருக்கத்தில் ஒன்று இருக்குமானால் அது நாமமாகும். இது சின்மயமானது,
- ஒவ்வொரு மனிதனும் பகவானுடைய நாமத்தை நினைக்க வேண்டும். அவரை தியானம் செய்ய வேண்டும். அவர் நினைவில் இருக்க வேண்டும். தன் வாழ்வைப் பொருளுடையதாகச் செய்ய வேண்டும்.
- ஆனந்தம் வேண்டுபவன் நாம ஸ்மரணம் செய்யட்டும்.
- பகவான் நம்மை எந்த நிலையில் வைத்திருக்கிறாரோ அதில் திருப்தியடைந்து, அவனை ஒரு போதும் மறக்கக் கூடாது.
- நாமம் இருக்கு மிடத்திலேயே பகவான் இருக்கிறான்.

Koviloor Digital Library

"அவன் உடலில் இல்லை" என்பதாகும். அவன் நாம ஸ்மரணத்திலேயே இருக்கிறான்,

- நாம ஸ்மரணத்தில் லயிப்பவனே சத் சங்கத்தில் வசிக்கிறான்.
- சத்குருவின் ஆணையைக் கடைப்பிடித்தவாறு சாதகனிடம் நாம ருசி அமைகிறது. நாமத்தை மனதாரக் கூறுவதால் அவன் ஆத்மா திருப்தி அடைகிறது.
- பாவனை நிரம்பிய உள்ளத்தோடு நாம ஸ்மரணம் செய்வோம்.
- எல்லோரையும் நேசிப்போம், கடமற்ற பிரேமையோடு நடப்போம், பேசுவதில் மட்டுமின்றி காண்பதிலும் பிரேம பாவனை இருக்கட்டும்
- நாமத்திற்கு தூய பாவனை அவசியம்.
- தன் வாழ்வின் குறிக்கோள் பகவானை அடைவது என்று கருதி அதற்கேற்றவாறு நடந்து கொள்ளுவோம், அதன் அனுசந்தானத்திலேயே (நிரந்தர நினைவு) இருப்போம்.
- நாம ஸ்மரணத்தில் லயித்திருப்பது சுலப வழியாகும்.
- நாம் அனைத்தையும் "நான் பகவானுக்காக இருக்கிறேன்" என்று கருத வேண்டும், நாமத்தில் தன் மயமாகி இருக்க வேண்டும்
- நாம் கடமையை மறக்கக் கூடாது. பகவானை நிரந்தரமாக நினைக்க வேண்டும். செயல் முறையிலும் கடமையைச் செய்து கொண்டே யிருக்க வேண்டும். மீதியை பகவானிடம் விட்டு விடுவோம்.
- இப்போது (இனி) நாம் தானாக சமாளிக்க வேண்டும். நாமமின்றி ஒரு வினாடியும் போக (கழிய)க் கூடாது.
- சிற்றின்பம் இருக்குமிடத்தில் பக்தியோ, பக்தியுள்ள இடத்தில் சிற்றின்பமோ கிடையாது. சிற்றின்ப விருப்பமுள்ளவரை பகவானின் தாஸனாக முடியாது.
- நல்ல காரியமோ கெட்ட காரியமோ அதன் காரணத்தில் எல்லாமே ஆதாரமாகிறது. மிகவும் புண்ணிய கர்மம் செய்தாலும், மனதில் காரணம் அல்லது வாசனையைத் தியாகம் செய்தாலும் மனம் ராமனிடம் இல்லாவிட்டால் ராமனை அடைவது இயலாது
- நமக்கு ஏதேனும் ஒரு நாமத்தில் தான் பிரேமை உண்டாகிறது. ஆனால் சித்தர்களுக்கு யார் எதை உச்சரித்தாலும் அது நாமம் என்றே தோன்றுகிறது. எந்த வாக்கால்–முறையால் நாம ஸ்மரணம் செய்வது என்று யோசித்து, எப்படி அமைகிறதோ அப்படி நாம ஸ்மரணம் செய்வோம்

Koviloor Digital Library

- நாமத்திடம் 'நாமமே நமது எல்லாம்' என்னும் பிரேமை உண்டாகட்டும்
- பக்தனும் பகவானும் ஒரே ரூபமானவர்கள்.
- பரமாத்மாவிற்கு குடும்ப உருவம் அளிப்பதற்குப்பதிலாக, நாம் குடும்ப வாழ்வை பரமாத்மாவின் ரூபமாகச் செய்வோம்.
- நாமம் இருக்குமிடத்தில் சாதுக்கள் இருக்கிறார்கள் என்பதை உறுதியாக அறிந்து கொள்வோம்.
- (எந்த) ஒவ்வொரு நிலையிலும் நாம ஸ்மரணம் சம்பவிக்கும்.
- பணம் சேர்ப்பதில் உசிதமற்றது ஏதுமில்லை. ஆனால் அது நம் ஆதாரமாகக் கூடாது, அதை அனுசந்தானத்தில் தடையாக விடோம்.
- நாமத்திடம் நம் மனதில் பிரேமை உண்டாகா விட்டால் அது நம்முடைய குற்றம் என்பதே முக்கிய விஷயமாகும்.
- நாமத்திடம் ருசி தோன்றுதல் விலக்ஷணமான விஷயம். யார் மனதில் ருசி உண்டானதோ அவன் தன்னையே மறந்து விடுகிறான். ஆகவே நாம் நம்மை நாமத்திடம் சமர்ப்பணம் செய்வோம்.
- பகவானிடம் நாமத்திற்காக பிரேமையையே கேட்போம்.
- பகவானிடம் நாம் "ஹே பகவன்! துர்பாக்கியத்தால் சங்கடம் வருவதானால் வரட்டும். ஆனால் உன் அனுசந்தானத்தில் பங்கம் ஏற்படாமலிருக்கச் செய்" என்று வேண்டுவோம்.
- நாமம் அகண்ட சந்தோஷத்திற்கான வழி
- குடும்ப வாழ்கையானது உடைந்த பொருட்களை சீர் செய்யும் ஒரு தொழிற் சாலையாகும். அதில் அத்தகைய பொருட்கள் எவ்வளவு அதிகமாக இருக்குமோ அத்தனை அதிகம் சந்தர்பம் கற்றுக் கொள்பவனுக்குக் கிடைக்கிறது. குடும்பத்தை கவனத்தில் வைத்து நாம ஸ்மரணம் செய்வோம்.
- அறிவுள்ளவன் தான் அறிந்து கொண்டு மற்றவனை ச்ரத்தையோடு பந்தனங்களைக் கடைபிடிக்கச் செய்ய வேண்டும்.
- ஈஸ்வரனின் நாமத்தை ஒரு போதும் விடக் கூடாது. பகவானின் நாமம் ஒரு முறை திடமாகி விட்டால் எந்தத் தடையும் வரமுடியாது.
- நாம ஸ்மரணத்தில் லயிப்பவனின் சிற்றின்ப உணர்வு அழிகிறது. குடும்பத்தின் பற்றிலிருந்து சிறிதளவு பகவானுக்கு இருக்கட்டும்.
- ராமனிடம் நம்பிக்கை வைத்து சுகமாக குடும்பம் நடத்துவோம்.
- நாம ஸ்மரணம் என்பதற்குப் பொருள் "நீ இருக்கிறாய்-நான் இல்லை" என்னும் நிலைமை.

Koviloor Digital Library

- குடும்ப வாழ்வில் 'ராமன் கர்த்தா' என்னும் பாவம் வைக்க வேண்டும். குடும்ப வாழ்வில் எல்லோருக்கும் எல்லாம் செய்து, ஆனால் மனதில் 'நான் பகவான் ராமனுடையவன்' என்ற பாவனையை அகண்டமாக வைத்து. அவன் நாமத்தை ஜபிப்போம்.
- நாம ஸ்மரணத்தில் ஆண் பெண்–செல்வந்தன்–ஏழை என்ற பேதமில்லை, ச்ரத்தையோடு மட்டும் செய்ய வேண்டும்.
- குடும்பத்தின் என்னுடையதெனும் தன்மையை பகவானின் பக்கம் திருப்பு. படித்ததை மறப்போம், பார்த்ததை மறப்போம், செய்ததையும் ஒரு வேளை மறந்து விடுவதானாலும் சரி ஆனால் உள்ளத்தில் இறுக்கிப் பிடித்துள்ள நாமத்தை ஒரு போதும் மறக்கக் கூடாது.
- நமக்கு உண்மையான சுகம் பகவானிடமுள்ளது. அவனையடைவதற்காக நாம் குடும்பத்தை விட வேண்டுமென்பதில்லை. முக்கியமாக குடும்பத்தில் நமக்குள்ள பற்று நஷ்டமாக வேண்டும். சாஸ்திரத்திலும் இதுவே கூறப்பட்டுள்ளது. குடும்ப வாழ்விலிருந்து மனதை விலக்கி நாமத்தில் ஈடுபடுத்துவதில் திருப்தி இருக்கிறது.
- கவலை நம்மை பகவானிடமிருந்து தொலைவில் விலக்குகிறது. பகவானை தன்னுடையவனாகச் செய்து கொண்டவனுக்குக் கவலையில்லை.
- பகவத் ஸ்மரணம் செய்து குடும்பம் நடத்தினால் நன்மை உண்டாகும்.
- பகவானிடம் அனைத்தையும் சமர்ப்பித்து கவலையற்றிருப்பதே அனுசந்தானம் என்று கூறப்படுகிறது.
- குடும்பவாழ்வில் பகவான் குறைவாக உள்ளார் என்று நமக்குத் தோன்ற வேண்டும்.
- பகவானை அடையும் விருப்பம் இருப்பதே எல்லாவற்றின் ரகசியமாகும்.
- விளக்கு எரிந்து கொண்டேயிருக்க வேண்டும் என்று நாம் விரும்பினால் அதில் எண்ணெய் ஊற்றுவது அவசியமாகும். அது போல் பகவானிடம் எப்போதும் அனுசந்தானம் வைப்பதற்கு அவன் நாம ஸ்மரணம் நிரந்தரமாகச் செய்வோம்.
- சுகமாகக் குடும்பம் நடத்துவதற்குப் பெயரே பரமார்த்தமாகும். குடும்ப வாழ்வால் சுகமடைவதன் பொருள் பகவானுடையவனாதல்.
- வாசனை என்பதன் பொருள் தெய்வத்திற்கு எதிராக தன் ஆசை.
- எந்த வகையான பலனையும் எதிர் பாராமல் செய்யப்படும் காரியத்தை 'கடமை' என்று கூறுகிறார்கள்.

Koviloor Digital Library

- இல்லறத்தில் நாம் சாக்ஷியாக நடந்து கொள்ள வேண்டும்.
- பகவானின் ஸ்மரணம் செய்தவாறு செயல் புரிவதால் வாழ்க்கையில் ஆனந்தம் கிடைக்கிறது. அமைதி இருக்கும் வீடே பகவானின் குடியிருப்பு. நாமம் எந்தப் பணி செய்யும் போதும் மனதை அமைதியாக வைக்கும்.
- கடமைக்காக வக்கீல் போராடுவது போல் கடமை என்று நினைத்து நாணயத்தோடு நம் இல்லறத்தை நடத்துவோம். பகவானை மறக்கோம்.
- சத்சங்கத்திற்கு வாழ்வில் மிகுந்த பெருமை உண்டு. பரமார்த்தம் கைகூட சத் சங்கம் மிகவும் தகுதியானது.
- நாம் நமது உண்மையான சுய நலத்தைக் கூட சாதிப்பதில்லை. கடமைக்காக விழிப்புணர்வும், பகவானுக்காக நினைவும் இருக்குமிடத்திலேயே சந்தோஷம் கிடைக்கிறது. ஐயமின்றி நாம் ஸ்மரணம் செய்வோம். ஒவ்வொரு நாளும் கண் விழித்ததும் நாம ஸ்மரணம் செய்வதை நியமமாகக் கொள்வோம். ஸ்னாநம் முதலிய காரியம் நடந்தால் சரி தான். ஆனால் அதற்காக நாம ஸ்மரணம் நின்று விடக்கூடாது.
- ஈஸ்வரனிடம் அகண்டமான அனுசந்தானம் இருந்தால் பலன் தானாக ராமார்ப்பணமாகும்.
- நாம ஸ்மரணத்தால் பைசாவின் பற்றில் இருக்காது.
- ஹே பகவான்! “நான் என் இல்லறத்தை சரீரத்துடன் உனக்கு அர்ப்பணம் செய்திருக்கிறேன்” –என்று உள்ளத்தில் பாவம் இருந்தால் ரகுபதி நமக்கு அருள் புரிவார்.
- சாதனங்களில் மிகுந்த எச்சரிக்கையோடு நடக்க வேண்டும். எச்சரிக்கையுடனிருந்து நாம ஸ்மரணம் செய்வோம். அது அகண்ட தாரை போலிருக்கட்டும். அப்போது தான் அது குணம் வரை செல்லும், ஸாரம் தோன்றும்.
- நிச்சயமாக நாம ஸ்மரணம் சித்த சுத்திதரும்
- நாமத்தைத் தவிர உலகில் வேறு ஒன்றும் சத்தியமல்ல என்னும் நமது கொள்கை உறுதியாகட்டும்
- உள்ளத்தில் பகவானுடைய தியானம் இருக்கட்டும், ஸ்வயம் சமர்ப்பணம் ஆகட்டும். இதுவே எல்லாவற்றையும் விட பெரிய சேவையாகும்
- எந்த சூழ் நிலையிலும் நாம் நம் குணத்தை நிலையாக வைப்போம்
- குணத்தை நிலையாக வைப்பதற்கு நிலையான வஸ்துவின் மீது ஒட்டி வைக்க வேண்டும். அத்தகைய நிலையான பொருள் பகவான் மட்டுமேயாவார்

Koviloor Digital Library

- இரு வகையால் நாம ஸ்மரணம் அவசியமாகிறது. ஒன்று இல்லறத்தின் உருவத்தை அறிவதற்காக, 2-வது பகவான் கிடைக்க வேண்டும் என்பதற்காக
- உடலை பரமார்த்தத்தின் சாதனம் என்று கருதுவோம்
- பகவானுடைய நாம ஸ்மரணத்தில் தேஹ புத்தியின் மரணமுள்ளது
- நான் 'பகவானுடையவன்' என்பதற்கான அகண்ட உணர்வு வைப்போம்
- பகவான் மீது யாருக்கு நம்பிக்கையோ அவனுக்கு சந்தோஷம் சிறப்பாகும்
- வ்ருத்தி நிலைப்பது, அமைதியாக இருப்பது என்பதையே சந்தோஷம் என்கிறார்கள். பகவானுடைய சிந்தனையில் எப்போதும் வ்ருத்தி இருப்பதையே சமாதி என்று கூறுகிறார்கள்
- பகவானிடம் பிரேமை அதிகரிக்கும் செயலைச் செய்வோம்.
  தனக்கு பகவத் பிரேமை உண்டாக வேண்டுமென்று விரும்புகிறவனுக்கு நாம ஸ்மரணமே ஒரே மார்க்கமாகும்
- பகவானின் நினைவில் இல்லறம் நடத்துவோம்
- தன் உடலை பகவானுக்கு சமர்ப்பித்தவன் தன்யனாவான். பகவானுக்காக செய்த நாம ஸ்மரணம் துயரின் காரணத்தைப் போக்கும்
- பிடிவாதமாக நாம ஸ்மரணம் செய்வோம்
- பகவானுடைய நாம ஸ்மரணம் செய்தல் ஞானம் கிடைத்ததற்கு லக்ஷணமாகும். பகவானிடம் ஈடுபாடு உண்டாகி விட்டால் ஆத்ம ஞானம் தானாக ஏற்பட்டு விடுகிறது
- பஜனம், பூஜை-நாம ஸ்மரணம் ஆகிய நாம் செய்பவை மனதில் செல்வாக்கை ஸ்தாபிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அப்போது தான் அதன் தகுந்த விளைவு விரைவில் தென்படும்
- பகவானுக்காக நாம் நம்மையே மறப்போம்.
  பரமாத்மாவின் ஸ்மரணத்திலேயே விஷயத்தின் மறதி உள்ளது
- நாமத்தை உயிருடன் சமாளிப்போம். நமது வாலிபத்தில் நாமத்தைப் பழக்கிக் கொள்ள வேண்டும். தொடக்கத்தில் தவறு நேரலாம், ஆனால் பிறகு தானாக ஸ்மரணம் உண்டாகும்
- ஆனந்தம் பெறுவதற்கு வாசனையை பகவானின் பக்கம் திருப்புவோம்
- சாஸ்வதமான ஆனந்தம் வஸ்து இல்லாததாகிறது
- பகவானுடைய ஸ்மரணமே சத்புத்தி
- நாமமும் அனுசந்தானமும் எப்போதும் 24 மணி நேரமும் நடக்க வேண்டும். அந்த சமயத்தில் வேறு விஷயம் ஏதும் நடக்க வில்லையென்றால் நடக்க விடாது. அதற்குப் பிடிவாதம் செய்யாதிருப்போம்

Koviloor Digital Library

- கர்வமற்றவனாகி-பரோபகாரம் செய்வது பகவானுடைய சேவையே ஆகும் உலகில் பரோபகாரத்திற்கு பெரிய மனிதர்கள் பிரசித்தமானவர்கள். ஆனால் பகவானின் அதிஷ்டானம் இல்லாத காரணத்தால் அவர்களும் அகந்தையில் சிக்கிவிடுகின்றனர்
- பகவானுடையதென்று கருதி இல்லறம் நடத்துவோம்.
  யாருடைய இல்லறத்தில் பகவானுடைய உதவி இருக்கிறதோ அந்த இல்லறம் பரமார்த்த ஸ்வரூபமேயாகும். யாருக்கு அகந்தை உதவுமோ அவன் வெறும் குடும்பஸ்தன் என்று அறிந்து கொள்வோம்.
- பகவானிடம் பற்றுதல் உண்டாக வேண்டும்
- யாருடைய சந்தோஷம் பகவானை ஆதாரித்ததோ அவன் சந்தோஷம் எந்த சூழ்நிலையிலும் பங்கமாவதில்லை
- எல்லாவற்றையும் மறந்து ராமனை மட்டுமே நினைப்போம்
- ரகு நாதனின் ஸ்மரணத்தில் ஆனந்தமாக இருப்போம். நமக்கு விரோதமாக யாருடையதும் நடக்காது
- சரீரம் மற்றும் மனதிலிருந்து நாம் தனியாக இருக்கிறோம். ஆகவே நாம ஸ்மரணம் செய்து நாம் தனியாக இருக்க முயற்சிப்போம். எந்த விஷயத்திலும் கை கூடாதது நாமத்தால் கை கூடும்.
- தன் கடமையை மறக்க வேண்டாம். பகவானின் அனுசந்தானம் தொடர்வோம். நமது செயல் முறை பரமார்த்தம் அனைத்தும் அவனுடைய விருப்பத்தால் நிகழ்கிறது. எந்த விஷயங்களால் பற்றுதல் உண்டாகிறதோ, அந்தப் பற்றை அழிப்பதே பரமார்த்தமாகும். பரமார்த்தமே தன் பிறவிக்கு உண்மையான காரணமாகும். சோம்பேறித்-தனம் பரவுமிடத்தில் பரமார்த்தம் மூழ்குகிறது. இல்லறம் பரமார்த்தம் அடைய சாதனமாகிறது. சாதுக்கள் நம்மை “சுகமாக இல்லறம் நடத்து, ஆனால் பகவானுடைய அனுசந்தானம் வை” என்று கூறுகிறார்கள். பகவானை இணைத்துக் கொள்வதே ஒரு தர்மமாகும் ‘நான் கர்த்தா’ என்பது இல்லறத்தின் முதல் படி, என்றால் ‘ராமன் கர்த்தா’ என்பது பரமார்த்தத்தின் முதல் படியாகும்.
- இன்று நமக்குக் கிடைக்கும் அவகாசத்தை பகவானுடைய நாம ஸ்மரணத்தில் கழிப்போம்.
- பகவானோடு நிலையான சம்பந்தமுமுள்ள பகவன் நாமம் அகண்டமாகக் கூறுவோம் என்பது நம்முடைய உண்மையான நித்திய நியமமாகும்.

Koviloor Digital Library

- துருவனைப் போல் நாமத்தில் நிஷ்டை இருக்கட்டும். சாக்ஷாத் பகவான் எதிரில் நின்ற போதும் அவன் நாமத்தை விடவில்லை.
- விஷயத்தின் (சுக போகம்) ஈர்ப்பை பகவானின் பக்கம் ஈடுபடுத்துவோம்.
- இல்லறத்தில் நமக்குள்ள பற்றுதலின் கால்பங்கு பகவானுக்காக ஈடுபடுத்தினாலும் நாம் வாழ்க்கையில் வெற்றி பெறுவோம்.
- நான் நாமத்தில் மட்டுமே இருக்கிறேன், என்கிறான் பகவான்.

  உண்மையே கூறுவதனால். அனைவரும் பகவன் நாமம் கூறிக் கொண்டேயிருப்பது, தவிர சாதுக்களுக்கு வேறு எந்த விருப்பமும் கிடையாது
- 'நான் ஒருவன்' என்னும் குணம் அழிக்கவல்லது.
- நமக்குத் தேவையான பொருட்களை நமக்கு அளிப்பது பகவானுடைய உண்மையான அருள் ஆகாது. ஆனால் நிகழ்கால நிலையில் நமது திருப்தி இருப்பதேயாகும்.
- எல்லாவற்றின் கர்த்தா ஸ்ரீ ராமன் என்னும் நம்பிக்கை உறுதியாக வைத்த பின் கவலைக்கு வேறு எந்தக் காரணமும் இருக்காது.
- சுகம் தியாகத்தில் இருக்கிறது, போகத்தில் இல்லை.

  என்னிடம் ஒரு பொருள் இருக்கிறது, அதனால் நான் சுகமாக இருக்கிறேன் என்று கூறுவதில் எந்த தத்துவமும் கிடையாது. எந்தப் பொருளும் இல்லாத போதும் சந்தோஷம் நிலையாக இருக்க வேண்டும்.

  நமது உள்ளமும் நடத்தையும் தூயதாக இருந்தால்–அத்துடன் பகவானுடைய நாம ஸ்மரணம் இருக்குமானால் அந்த இல்லறமே சுக சாதனமாகும்
- ஞானம் இருபுறம் கூர்மையுள்ள ஆயுதமாகும்.
- மிகுந்த கடினமான பிரச்னைகள் நிரம்பிய உலக நூல்களைப் படியுங்கள். ஆனால் கடைசியில் எளிமையாக நாம ஸ்மரணமே செய்யுங்கள்.

  எல்லாவற்றையும் செய்வோம், ஆனால் உண்மையான பிரேமை, சாதனையில் செய்வோம்.
- சாதுக்களிடம் நம்மிடம் ஒரே விஷயத்தைக் கேட்கிறார்கள். "நீங்கள் நாமத்திலிருந்து ஒரு போதும் விலகியிருக்க வேண்டாம்."
- பகவானை அடைய வேண்டுமென்று ஆசை உண்டாவது பாக்கிய விஷயம். அத்தகைய சீடன் கிடைத்துவிட்டால் சந்த்திற்கு வாழ்க்கைப் பயனுள்ளதான ஆனந்தம் உண்டாகிறது.
- நாமத்திடம் பிரேமை கொள்வதே குருவிடம் பிரேமை செய்வதாகும்.

Koviloor Digital Library

- பக்வன் நாமத்தை சித்தம் செய்வதே சந்த்களின் மிகப் பெரிய உபகாரம் ஆகும்.
- "நீ நாம ஸ்மரணம் மட்டும் செய். மற்ற அனைத்தையும் நான் செய்கிறேன்," என்பது குரு வசனம்
- நம்மை அனுசந்தானத்தில் வைப்பது ஒரு வகையான பயிற்சியாகும். நாமத்தில் பிரேமை அதிகமாகுமானால் அனுசந்தானம் தங்கும்.
- வாயில் அகண்ட நாமம் மனதில் அனுசந்தானம் இருக்கட்டும். சரீரம் இல்லற காரியத்தைச் செய்யட்டும். இதுவே பரமார்த்தத்தின் ரகசியமாகும்.
- நாம ஸ்மரணம் செய்யத் தீர்மானிப்போம்.
  பகவானுடைய நாம ஸ்மரணத்தில் பற்றுதல் உண்டாகி'விட்டால் துயர உணர்வு குறைவாகும். துக்க உணர்வில்லாவிட்டால் துக்கம் ஏற்பட்டாலும் ஏதும் கெட்டுவிடாது.
- குணத்தோடு நாமம் கூறுவோம்.
  பக்வான் ராமனே நம்முடைய ரக்ஷகர் என்பதறிந்து நம் குணத்தை பயமில்லாமல் வைப்போம்.
- பகவானை ஜபித்து-சேவை செய்து ஏதேனும் கிடைக்கும் என்று நினைக்கக் கூடாது.
- பகவானும் நாமமும் வேறல்ல. (ஒன்றே) பகவான், பக்தன், நாமம் இவை மூன்றும் ஒரே ரூபமானவையாகும். நாமம் இருக்குமிடத்தில் பக்தன் இருக்கிறான், அங்கேயே பகவானும் இருக்கிறார்.
- பகவானுக்காக கவலைப்படுவது சாதகத் தன்மையின் பிராணனாகும். ஆகவே இரவு-பகல் ராமனுக்காக பற்றுதலிருக்கட்டும், வாயில் அவன் நாமம் இருக்கட்டும்.
- இயன்றவரை நாம ஸ்மரணம் செய்வோம், ஏதும் இயலாவிட்டால் அவனுக்கு உதவியாளன் ராமனாவான்.
- சாக்ஷியாக இருப்பவர்களுக்கு துயர இடையூறு உண்டாவதில்லை. சந்தோஷம் பகவானுடைய உண்மையான கொடையாகும். அதைப் பெறும் உபாயம் பகவன் நாம ஸ்மரணம் செய்வதாகும். சாதுக்கள் பஜனம் செய்யும் போது அவர்களுக்கு பகவானை தவிர வேறு ஒன்றும் தென்படாது. அவ்வாறு நம்முடையதாக வேண்டும் என்பது சாதுக்களின் விருப்பமாகும். நாமத்தில் சந்தோஷமிருப்பது சத்குருவின் அறிமுகமாகும். ராம சரணத்தில் மனதை அர்ப்பணம் செய்து. இரவும் பகலும் நாம ஸ்மரணம் செய்வோம்.

Koviloor Digital Library

வேதங்களைப் போல நாமமும் முதலற்றது, முடிவற்றது, அபௌருஷேயமானது. நாமத்தைத் தவிர மற்ற சாதனைகளால் விரைவில் கைகூடிவிட்டதென்று தோன்றும். ஆனால் அது தற்காலிகமானது. நாம ஸ்மரணத்தால் சிறிது தாமதம் உண்டாகலாம், ஆனால் கைகூடுவது நிரந்தரமாகக் கைகூடும். ஏனெனில் நாமத்தின் மூலமாகவே சீர் திருத்தம் உண்டாகிறது.

- இல்லறத்தில் மூழ்கிய மனிதர்கள் விஷயத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்கின்றனர். ஆனால் சுக போகத்தைக் கேட்டாலும் யார் அளிப்பதில்லையோ அதிலிருந்து விலக்குகிறாரோ அவரே சந்த் ஆவார்.
- நாம ஸ்மரணத்தில் உண்மையான ஆனந்தத்தைத் தவிர வேறொன்றும் இல்லை.
- பகவானின் நாமத்தை விடாதே.
- மனதில் ஏற்படும் சங்கல்பங்கள் நாம ஸ்மரணத் தோடிருக்கட்டும்.
- அதிக பிரேமையோடு நாம ஸ்மரணம் செய்வோம். அதில் மூழ்கிய பிறகு உடலின் சுக-துக்கத்தின் இடையூறு இருக்காது
- ராமனே கர்த்தா என்று கூறுபவன் சுகமாக இருப்பான், நான் கர்த்தா என்று கூறுபவன் துக்கியாகி விடுவான்.
- நாம ஸ்மரணம் செய்பவன் முன்னாலும் பின்னாலும் சாதுக்கள் நிற்கிறார்கள். "நாமம் இருக்குமிடத்தில் நான் இருக்கிறேன் என்றே சாதுக்கள் கூறுகிறார்கள் என்று நம்பிக்கை வைப்போம்." சாதுக்களால் யாருடைய துக்கத்தையும் பார்க்க முடிவதில்லை. ஸ்ரீ ராமனுக்குத் தன் அனைத்தையும் சமர்பணம் செய்பவனுக்கு ராமன் எல்லாமும் அளிக்கிறார் என்பது சாதுக்களின் அனுபவமாகும். ராமன் கர்த்தா என்பதை மனதில் அறிந்து சந்த்கள் உலகில் சஞ்சரிக்கிறார்கள். நாமமிருக்கு மிடத்தில் ராமன் உள்ளான் இதனால் ரகுநாதரின் நிச்சயமான அருள் உண்டாகும் என்றே நம்புவோம்.
- நாம் பகவானுடையவரானால் சுகியாவோம்.
- ஹே ராம்! எல்லாம் உன்னுடையது, நீ கொடுப்பதையே பெற்றுக் கொள்வேன் என்ற பாவனை வைப்போம். இதனாலேயே மிகவும் சந்தோஷம் உண்டாகும்.
- வாயால் நாமம் கூறுங்கள், மனதால் ஸ்மரணம் செய்யுங்கள், இரண்டையும் ஒன்று படுத்துங்கள்.
- பகவானுடைய ஆனந்தம் அகண்டமாகக் கிடைக்கட்டும். நான் அவனுடையவனாவேன் என்ற பார்வையுடன் நாம ஸ்மரணம் செய்வோம்.

Koviloor Digital Library

- வாசனையை அழிப்பதற்காக பகவானுடைய அதிஷ்டானமே ஒரே உபாயமாகும்.
- நாம ஸ்மரணம் நன்கு தெரிந்து செய்வோம். தெரிந்து என்பதற்குப் பொருள் 'ராமன் கர்த்தா' என்னும் பாவனையை உறுதியாக வைத்து என்பதாகும்.
- மனதில் சங்கல்பம் தோன்றியதுமே அதன் மீது ராம நாமத்தின் முத்திரை வை.
- பகவானின் ஸ்வரூபத்தில் அறிமுகம் நாமத்தாலேயே உண்டாகிறது.
- பகவானுடைய திருவுருவங்கள் எங்கிருந்து வருகின்றனவோ அங்கு நாமத்தின் இருப்பு உள்ளது.
- சந்தோஷம் உள்ள திருத்தத்திற்கு அடையாளமாகும். அகண்ட நாம ஸ்மரணம் செய்து கொண்டு மிகுந்த சந்தோஷத்தோடிருப்போம்.

  சந்தோஷம் உடையவன் பாக்கியவான். நாம ஸ்மரண காரணத்தால் ஆனந்தமும், சந்தோஷமும் அனாயாசமாகக் கிடைக்கிறது. இதில் எந்த ஐயமும் கிடையாது. சந்தோஷம் பகவானைத் தவிர வேறெங்கும் இல்லை.
- எல்லா இடங்களிலும் பகவானைக் காண்பதே பரமார்த்தமாகும்.

  முதல் இல்லறத்திலும் மனம் ரகுநாதனின் சிந்தனையிலும் இருக்கட்டும். உள்ளத்தை நாமத்தில் வை, அதை சத்தியம் என்று கருது. இதை நிச்சயமாகக் கருது. மனம் பிரமையில்லாமல் போகும்.
- பரமாத்மாவின் நினைவால் அமைதி கிடைக்கிறது.

  அமைதி பகவானின் நினைவாலேயே கிடைக்கிறது. அகண்டமாக நாம ஸ்மரணம் செய்து அமைதியாக–சுகமாக இல்லறம் நடத்துவோம்.
- சரீர சுக துக்கத்தை விதியிடம் விட்டுவிடுவோம். முயற்சியோடும் பிரேமையோடும் நாம ஸ்மரணம் செய்வோம்.
- சாஸ்வதமான் ஆனந்தம் பகவானிடமிருந்தே கிடைக்கிறது.
- அவகாசம் கிடைத்ததுமே வம்பளப்பதில் நேரத்தை வீணாக்காமல் நாம ஸ்மரணம் செய்வோம்.

  (செயலில்) குணத்தில் திருப்தியாக இருப்பது பகவானுடைய அருளின் அடையாளமாகும்.
- செயலில் சந்தோஷம் உண்டாவது பகவத் கிருபையின் அடையாளமாகும். அதற்காக எப்போதும் பகவானிடம் அனுசந்தானம் வைப்பது மிகவும் அவசியமாகும்.

Koviloor Digital Library

- நாமத்தைத் தவிர வேறு எதனிடமிருந்தும் உண்மையான சந்தோஷம் கிடைக்காது.
- யாருடைய சந்தோஷம் பகவானை அண்டி இருக்கிறதோ அவனுடைய சந்தோஷம் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தொடர்ந்து இருக்கும்.
- பகவானிடம் முழு நிஷ்டையை வைத்து இல்லறத்தில் தன் கடமையைச் செய்தால் நமக்கு துயரப்பட வேண்டிய சந்தர்ப்பமே ஏற்படாது.
- பகவானிடம் முழு நிஷ்டை வைத்து இல்லறம் நடத்தினால் இல்லறம் நிச்சயம் சுகமளிப்பதாகும்.
- அனன்ய பாவத்தோடு ஸ்ரீ ராமனை சரணடைவோம்.
- ராமன் தான் கர்த்தா என்னும் திடமான ச்ரத்தை யுடையவனை ஆஸ்திகன் என்று கூறலாம்.
- நாமம் ஜபித்து–நாமம் ஜபித்து முதலில் மனிதன் முமுக்ஷு, சாதகன் அதன் பின் சித்தனாகிறான்.
- மிகுந்த ப்ரயாசை செய்யாதே. நெஞ்சில் நாமத்தை வை. எப்போதும் பகவத் ஸ்மரணம் செய்.
- நாம் பகவானுக்காக இங்கு வந்திருக்கிறோம்.
- இல்லற அனுபவம் கஷ்டமளிப்பது. ஆனால் பகவானுடைய அனுபவம் ஆனந்தமயமானது.
- காரணமில்லாமல் உண்டாகும் ஆனந்தமே உண்மையான ஆனந்தம் ஆகும்.
- மற்ற சாதனங்களால் கைகூட வேண்டியது அனுசந்தானத்தாலேயே கைகூடி விடுகிறது. இதுவே இந்த யுகத்தின் மகிமையாகும்.
- யாருடைய ஒவ்வொரு செயலும் ராம ஸ்மரணத்தில் ஆகிறதோ அவனே உண்மையில் ராம ராஜ்ஜியத்தில் வசிக்கிறான்.
- சாதுக்கள் இன்று வரை நாம ஸ்மரணம் செய்வது தவிர வேறு எதையும் கூறியதில்லை. சாதுக்களை சந்திக்க வருபவனின் வாயிலிருந்து நாம ஸ்மரணம் செய்விக்கும் பொறுப்பை சாதுக்களே ஏற்றுக் கொள்கிறார்கள்.
- பகவானைத் தவிர வேறொரு சத்தியம் உலகில் கிடையாது. இந்த நம்பிக்கையிருந்தால் இல்லறமோ உலகமோ அதை பரமார்த்தம் என்று கருதுவோம்.
- நாமத்தில் இருப்பது என்பதன் பொருள் மரணத்திற்கப்பால் இருப்பது.

Koviloor Digital Library

- தன் மரணத்தைத் தன் கண்களால் பார்ப்பது என்பதற்கு தன் எதிரில் வாசனை முழுதும் அழிவதன் அனுபவம் வருதல் என்பது பொருள் ஆகும்.
- சாதனையில் பூரண பாவமும் கவலையும் வேண்டும். பகவான் இருக்கிறார் என்ற பாவனையோடு சாதகன் தொடங்கட்டும். 'பகவான் இருக்கவே இருக்கிறார்' என்னும் பாவனையோடு முடிக்கப்படட்டும்
- அகந்தை யில்லாமலாகாவிட்டால் பக்தி செய்யவே முடியாது
  எல்லா சிருஷ்டியும் ராம ரூபமாகத் தென்படுதல் பக்தியின் பலனாகும்
- நாமம் மந்திர விளக்கே ஆகும்
- எப்போதும் நாமத்தில் இரு– ஸ்ரீ ராமனே கர்த்தா என்ற பாவனையை உறுதி செய்
- சரீரம் எப்போது அழியும் என்பது தெரியாது. ஆகவே முதுமையில் நாம ஸ்மரணம் செய்வோம்' என்று கூறாதே
- பகவானை மறப்பதே பெரும் பாவமாகும்
- ஒரு முறை பகவான் பக்கம் பார்வை ஈடுபட்டால் மற்ற எல்லா விஷயங்களின் தியாகமும் தானாக ஆகிறது
- ஸ்ரீ ராமனின் திருவடியில் மனதை வைப்போம், இரவு பகல் நாம ஸ்மரணம் செய்வோம்
- மனதில் எப்போதும் ராமனை ஜபி. கையை பணியில் (சேவை) ஈடுபடுத்து, வீண் உழைப்பு வேண்டாம்
- நாமம் கர்வத்தை அழிக்கிறது. சத் கர்மத்தால் கர்வம் அழிவதில்லை. பகவானுடைய ஸ்மரணத்தாலும் சத் சங்கத்தாலும் அது நஷ்டமாகிறது. தூய பாவனையில்லாவிட்டால் எல்லாம் வீணாகும். நாம் பகவானிடம் 'என்னை உன் நாம ஸ்மரணத்திலேயே ஈடுபடுத்து' என்றே கேட்போம்.
- அகண்ட அனுசந்தானமே சந்த் சரித்திரத்தின் ரகசியமாகும். யாருடைய வாயில் நாமம் உள்ளதோ அவன் இதயத்தில் சாதுக்கள் வசிக்கிறார்கள்
- பகவானிடம் மனதை ஈடுபடுத்துவோம். உடலை விதியிடம் விடுவோம் பகவானுடையவன் ஆகிவிடுபவன் தேஹத்தை விதியிடம் விட முடியும் பகவானையடையும் பற்றுதல் இருக்கட்டும்
- நாம் நாமத்தை எச்சரிக்கையுடன் வைத்தால் விகாரங்கள் வெளிப்பட முடியாது
- தேஹ ரூபமான கிராமத்திலிருந்து ராம ரூப கிராம யாத்திரையில் ராம நாமம் உத்தம உறுதுணை (வழிச் செலவு) ஆகும்

Koviloor Digital Library

- பக்தியின் பொருள் ஈஸ்வரனிடம் மிகுந்த பிரேமை
- கட்டுப்பாடற்ற மனதை நாமம் என்னும் கனத்த கட்டையால் கட்டி விட்டால் மனதில் பகவானுடைய பிரேமை நிர்மாணமாகும்
- சந்தகளுக்கு கிருஷ்ணனை அடைவதற்கு, அவர் எங்கு பிறந்தார்? என்னும் நிர்ணயத்தை அறிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்கள் திட உபாசனை செய்து பகவானை சொந்தம் கொண்டாடி விட்டார்கள். உண்மையைக் கூறுவதானால் ஸ்ரீ கிருஷ்ணனின் ஜனனம் உபாசனை மூலமே இதயத்தில் நடக்க வேண்டும்–அதுவே சத்திய ஜன்ம ஸ்தானம்.
- நாம ஸ்மரணம் செய்யும் போது நம்மை நாமே மறக்குமளவு ஒன்றிப்பு இருக்க வேண்டும்
- பகவானே நம் மூலம் எல்லா காரியமும் செய்விக்கிறார். ஆகவே நாம், அவர் தூண்டு கோலால் எல்லாம் நிகழ்கிறது, என்ற பாவத்தோடு செய்தால் பகவானிடம் நமது பிரேமை உறுதியாகும். எதையும் பகவானுக்காக செய்வோம் என்றால் நமக்கு பாவ புண்ணிய இடையூறு ஏன் வரும்?
- கலியுகத்தில் அவதாரம் இல்லை. ஆனால் நாமாவதாரம் அவசியம் உண்டு. அதுவே உண்மையாக உத்தாரம் செய்ய வல்லது
- பகவானுடைய ஸ்மரணமே செயல் மறதி குணமாகும். பகவானை ஸ்மரிப்பது யாகமாகும்
- பகவானுடைய விருப்பத்தால் காரியம் செய்யாதவனாக இரு. கர்மம் செய்வதையே அனுசந்தானம் வைப்பது அல்லது பக்தி என்று கூறுகிறார்கள்
- அனுசந்தானத்தில் இருப்பதால் கர்வம் லயமாகிறது
- தீயிடம் நெய்யை வைத்தால் அது உருகுகிறது. அதைப் போல் நாம அடுப்பை வைத்தால் கர்வம் உருகி கரைந்து விடுகிறது
- காக்ஷி உருவில் பகவானுடைய சங்கேதம் நாமமே ஆகும். நாம ஸ்மரணத்தில் நம்பிக்கை இருப்பது பெரும் பாக்கியத்திற்கு லக்ஷணமாகும்
- எல்லா ஜீவனிலும் பகவான் இருக்கிறான் என்னும் நம்பிக்கை உண்டாவதற்கு முன்னால் ‘அவன் என்னிடம் இருக்கிறான்’ என்ற நம்பிக்கை உண்டாக வேண்டும்
- நாம ஸ்மரணம் செய்யும் சமயம் தன்னையே மறப்பது எல்லாவற்றிலும் உத்தம சாதனையாகும். நாம ஸ்மரணத்தில் தன்னை மறக்கக் கற்றுக் கொள்வோம்.

Koviloor Digital Library

- பகவானிடம், நாம் ஏதும் கேட்கும் விருப்பம் இருக்காதவாறு கேட்போம் பகவானிடம் சந்திப்பு-பிரிவில் தான் உண்மையான சுக-துக்கம் உள்ளது
- ராம நாமத்தின் இரண்டு எழுத்துக்களை அறிந்து கொள்வோம். அவற்றை சாதுக்கள் வாயால் புரிந்து கொள்வோம்
- இல்லறத்திலும் உலகிலும் உண்டாகும் பற்றுதலைப் போல் ராம சரணத்தில் உண்டாவது ராம பக்தியாகும்
- கடமைக்காக எப்போதும் தயாராக இருக்க வேண்டும். வாயில் எப்போதும் நாமம் இருக்கட்டும்
- பகவத் ஸ்மரணமே பக்தியின் ரஹஸ்யமாகும்
- சங்கட மலை தன் மீது விழுந்த பிறகும் மனசஞ்சலம் அடையாதவனே உண்மையான பகவத் பக்தனாகிறான்
- ராமன் வைப்பதில் மகிழ்ச்சி அடைவதே பக்தனின் உண்மையான லக்ஷணமாகும்
- ராம நாமம் அல்லாமல் இவ்வுலகில் ஒன்றுமில்லை என்று சாதுக்கள் சத்தியமாகக் கூறுகிறார்கள். நாம் காரணமின்றி நாமம் கூறினால் ஆத்மா ராமனோடு நம்முடைய உறவு உறுதியாகும்
- குணம்-செயல் பகவன்மயமாக இருப்பதையே பக்தி என்று கூறுகிறோம்
- வேதாந்திகள் பிரம்மம் என்று கூறுவதையே பக்தர்கள் நாமம் என்று கூறுகிறார்கள்
- நிஷ்டை பலமுள்ளதாக இருக்கட்டும்.

  நாம ஸ்மரணம் செய்யும் போது பகவானிடம் எனக்கு இல்லறத்தில் ஏதும் அளிக்காதே. ஆனால் எனக்கு உன் அன்பு கிடைக்க வேண்டும் என்று பகவானிடம் கூறுவோம்
- பகவானுடைய ப்ரேமை கிடைத்தால் மக்களின் அன்பு கிடைக்கும்
- நம் வாழ்க்கை பகவான் கையில் உள்ளது. பகவான் நாமத்திற்கு அதீனமானவன்.
- லயித்த மனிதனுக்கு பகவான் விரைவில் கிடைக்கிறார்
- கர்வம் இல்லாமல் ராமனை சரணடைவோம். அதனாலேயே ராமன் சொந்தமாவான் என்பதை அறிவோம்
- பரநிந்தையும், வித்தையின் கர்வமும் மனிதனை பகவானிடமிருந்து விலக்குகின்றன

Koviloor Digital Library

- நிந்தை தன் சாதனையை எரித்து விடுகிறது.
- அனன்ய தன்மையிலேயே பக்தி பிறக்கிறது
- நடக்கும் ஒவ்வொரு விஷயமும் பகவான் விருப்பப்படி நடக்கிறது என்ற பாவனை உறுதியாக வைப்பதன் பொருளே பக்தி செய்தல் ஆகும்
- பகவானுக்கும் நமக்கும் இடையில் கர்வமாகிய திரை உள்ளது. இது விலகியதுமே நமக்கு பகவான் கிடைக்கிறார்
- பகவானை அடைவதில் உண்டாகும் தடைகளை விலக்க யார் துடிதுடிக்கிறானோ அவனுடைய சாதனை சரியாக நடக்கிறது என்று அறிந்து கொள்வோம்
- நாம ஸ்மரணத்தில் இருந்து இல்லறம் செய்பவனின் இல்லறம் முழுமைத் தன்மையை அடைகிறது
- பகவானுக்கு தன்னை சமர்ப்பணம் செய்வோமாகில் சுக துக்கம் அழிந்துவிடும். எதையெல்லாம் நம்முடையது என்று கருதுகிறோமோ அவை அனைத்தும் ராமனுடையதாகும். அவனே நிர்வகிக்கும் போது கவலைக்குக் காரணம் என்ன?
- வாயில் நாமம், நீதியான நடத்தை–உள்ளத்தில் பகவானின் பிரேமை இருக்கட்டும்
- நாம் நாம ஸ்மரணம் செய்யத் தொடங்குவோம். பகவானுடைய பிரேமை கிடைத்தே தீரும்
- விசாரத்தாலும், நாமத்தாலும் நாம் வாசனையை நிச்சயமாக வெல்ல முடியும். பிறகு நான் கர்த்தா என்னும் கர்வம் தானாக அழிந்து விடும்
- யாருடைய மனம் பூஜையாகுமோ அவனுடைய பூஜையே உண்மையானது. எல்லா பிராணிகளிடமும் பகவத் பாவனை பார்ப்பதும் யாருக்கும் கஷ்டம் தராமையும் உண்மையான பூஜையாகும். பூஜைக்கு வெளி உபசாரம் அவசியமில்லை. ஆனால் மனம் அவசியம் சமர்ப்பிக்க வேண்டும். பூஜை செய்யும் போது பாவனை இருப்பது அவசியம்
- உபாதி வாசனைகளை அழிக்க நாம ஸ்மரணம் அவசியமாகும்
- தூய உள்ளத்தோடு நாம ஸ்மரணம் செய்தால் பகவத் க்ருபையின் அனுபவம் உண்டாகும்
- பகவானைக் கர்த்தாவாகக் கருதி கவலைப் படுவதை விடுவோம்
  பகவான் நம் இதயத்தில் இருக்கிறார்
- நமக்கு நாம ஸ்மரணம் செய்ய ஆசை இருக்க வேண்டும்

Koviloor Digital Library

- ராமனிடம் நம்பிக்கை வைத்தால் நிச்சயம் மகிழ்ச்சி உண்டாகிறது
- மனதையும் சரீரத்தையும் சமர்ப்பித்து விட்டால் பயத்திற்குக் காரணம் என்ன?
- ஒவ்வொரு மனிதனும் பகவானை அடையவே பிறந்திருக்கிறான்
- நாம் பகவானை சரணடைந்தால் அவன் நம்மை ஒரு போதும் விட மாட்டான்
- பகவான் நம் அனைவருக்கும், 'நீ முன்னால் போ, நான் உன் பின்னாலிருக்கிறேன்' என்று கூறியுள்ளார்.
- பகவான் விருப்பப்படி அனைத்தும் நடக்கிறது என்ற பாவனை வைத்து, தன் கடமையைச் செய்வது கீதையின் சாரமாகும்
- யாருடைய இல்லறத்தில் பரமாத்மா ஆதாரமாகிறாரோ அவனுக்கு இல்லறமே பரமார்த்தமாகிறது
- விஷயங்கள் மனதில் புகுந்ததுமே பகவானை ஸ்மரணம் செய்வோம்
- மாயை நம் மீது விஷயமாகிய அஸ்திரத்தை விடும் போது நாம் அதன் மீது பகவன் நாம அஸ்திரத்தை விடுவோம். அதனால் விஷயம் தானாக நஷ்டமாகும்
- பகவானுடைய பிரேமையின் காரணமாக உண்மையான சந்தோஷம் அடைபவனே பாக்கியவானாவான்
- நமக்கு பகவானே ஆதாரமாகத் தோன்ற வேண்டும்
- பகவான் ஒருவரே சத்தியமானவர். நமக்கு இல்லறம் ஒன்றே சத்தியமாகத் தோன்றுவது நம்முடைய தவறாகும்
- இல்லறம் செய்வதை நாம் நம்முடைய சுயநலம் என்கிறோம். ஆனால் அது உண்மையான சுயநலம் இல்லை. உண்மையான சுயநலம் பகவானுடையவனாவதில் உள்ளது
- உண்மையில் பகவானுடைய அருள் இல்லாமல் மற்ற விஷயங்கள் நடக்கட்டும், நடக்காமல் போகட்டும். வேற்றுமை ஏதுமில்லை
- எறும்பு மலை மீது ஏற முயற்சிக்கிறது. நீண்ட நேரத்திற்குப் பிறகு மலை மீது ஏறியே விடுகிறது. இதை கவனத்தில் வைத்து நாமும் முயற்சிப்போம்
- பகவானிடமிருந்து தனித்திராதவர்கள் முக்தர்களே, நான் பகவானின் தாஸன் என்று நினைத்தால் கட்டு முடிந்து விட்டது. "நானில்லை, அவன் இருக்கிறான்" என்று அறிந்து கொள்வது முக்தியடைவதாகும்
- சரீரத்தின் கடிவாளத்தை பகவானுடைய கையில் ஒப்படைத்து விட்டு, நாம ஸ்மரணம் செய்தவாறு நாளைக் கடத்துவோம்

Koviloor Digital Library

- 'நானே தேஹம்' என்ற பாவனை இருக்கும் வரை துயரம் தொடர்ந்திருக்கும். துன்பங்கள் இருக்கும். சாரமென்ன வென்றால் சரீரப் பற்றுதலே துக்கமாகும்
- பகவானின் அறிமுகம் உள்ளவரே ஞானியாவார். பகவான் வெறும் ஞானத்தால் அறியப்பட மாட்டார், மற்ற ஞானம் வெற்று சொல் வலையாகும். பக்தி செய்வதாலேயே அவரை அறிய முடியும், பசு வந்தால் அதன் பின்னால் கன்றும் தானாக வருவது போல்–அதைத் தனியாகக் கூப்பிட வேண்டியதில்லை என்பது போல், பக்தி செய்தால் ஞானம் தானாக பின்னால் வருகிறது.
- நாம ஸ்மரணமே சத்தியமாகும். இதன் மீது உலகில் நாம ஸ்மரணம் தவிர வேறு ஒன்றுமே
 இல்லை என்று நமக்குத் தோன்றுமளவு அதை நம்ப வேண்டும்
- வைராக்கியம் வ்ருத்தியில் உள்ளது. பகவான் கொடுத்திருப்பதில் சந்தோஷமடைவதும் எந்த விஷயத்திலும் லோபமின்மையும் தான் வைராக்கியம் ஆகும்
- மனதின் நான் சரீரத்துடையவன் என்ற பாவனை இருப்பதன் காரணமாக நாம் சரீர ரூபமாகி விட்டது போல் மனதால் 'நான் பகவானுடையவன்' என்று எப்போதும் கூறினால் நாம் பகவத் ரூபமாகிவிடுவோம்
- சந்த்கள் நிச்சயித்துள்ள பாதை வழியே கண்களை மூடிக் கொண்டு செல்வோம். பின் விழவோ–தடுமாறவோ நேரும் பயமிருப்பதில்லை
- இல்லறத்தை பகவானுடைய தாகக் கருதி நடத்துவோம்
 இந்த உலக முழுவதும் இல்லறம் ஈஸ்வரனுடையது. இல்லறம் யாருடையதோ அவனிடம் அதை கொடுத்து, நாம் விடுதலை யடைவோம்
- பகவானுடைய நாமமே எல்லாவற்றிலும் சிறந்தது. அதில் வண்ணமிடப்பட்டவன் உண்மையான பிரேமியாவான்
- பகவானிடம் நிஷ்டை வைப்போம். அன்பு செய்வோம். பகவான் கஷ்ட சாத்யனல்ல, சுலப சாத்யனாவான்
- பகவன் நாமத்தைத் தவிர நான் வேறு எதையும் அறியேன் என்று அறிந்து கொண்டவன் எல்லாமறிந்தவனாவான்
- கற்பனை மாயையின் ஆயுதம். கற்பனை இல்லாத சிறிதளவு நாம ஸ்மரணமே பலனளிக்கும்
- பகவான் மிகுந்த பாசமுள்ளவர். எல்லா விஷயங்களையும் மறந்து நாம் பகவானை வேண்டினால் அவர் அருள் செய்கிறார். பகவான் கற்பனைக்கு அப்பாற்பட்டவர். நிச்சயமில்லாததைக் கற்பனை என்கிறோம். பகவான்

Koviloor Digital Library

இருக்கிறார் என்று சந்தேகமில்லாத பாவனையோடு தோன்றுவதையே ஞானம் என்று கூறுகிறோம். தீவிரமான பாவனையோடு பகவானை உபாசனை செய்வோம்.

- ◈ சந்த்கள் நாம ஸ்மரணம் என்னும் படகை நமக்கு அளித்துள்ளனர். அதில் நாம் நம்பிக்கையோடு உட்காருவோம். சந்த்கள் படகோட்டி யாவார்கள். அவர்கள் நம்மை கரையேற்றி விடுவார்கள்
- ◈ பகவானிடம் நாம் நமது உறவை இணைத்துக் கொள்வோம்
- ◈ பகவானுடைய நாம ஸ்மரணம் செய்து கொண்டே இருப்பதால் அவனை சொந்த மாக்கிக் கொள்ள தனியாக ஏதும் செய்ய வேண்டியிருப்பதில்லை
- ◈ நிர்குணம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. புரிவதுமில்லை. ஆகவே அது அவதார ரூபம் அல்லது சந்த் ரூபத்தில் சகுண ரூபம் தரித்து அவதரிக்கிறது
- ◈ இல்லறம் மற்றும் பரமார்த்தத்தின் பகைமையைக் கண்டு சந்த்கள் சமப்படுத்த முயன்றனர், நாம ஸ்மரணம் செய்து கொண்டே இல்லறம் நடத்துவதே சமன் வயமாகும்
- ◈ நாமத்தில் உறுதியான ச்ரத்தை வைத்து பரமார்த்தம் செய்வோம். நாமத்தை விடாமல் மற்ற விஷயங்களைச் செய்வோம்
- ◈ லோபியின் மனதில் பணப் பேராசை, அது போல் நம் உள்ளத்தில் அனுசந்தானம் வைப்போம்
- ◈ ராமனைத் தவிர உலகில் எதுவும் சத்தியமில்லை என்று ச்ருதியும் ஸ்ம்ருதியும் கூறுகின்றன. ராமனின் சக்தியில்லாமல் மரத்தின் இலை கூட அசையாது என்று சிறியவரும் பெரியவரும் அறிவார்கள்
- ◈ உலகில் பகவானைத் தவிர சத்ய வஸ்து கிடையாது என்ற நிஷ்டை உடையவனே உண்மையான யோகி ஞானி மற்றும் பரமார்த்தன் என்று கருதுவோம்.
- ◈ அகண்ட நாம ஸ்மரணத்திலிருப்பதே உபாசனையாகும்
- ◈ நாமம் ராம பாணத்தைப் போன்றது
- ◈ நாமத்தில் லயிக்கும் வரை நாமம் கூறு. லயித்ததும் அது விடுபடாது
- ◈ ஸ்ரீ ராம நாம வங்கியின் பெருமை நாமத்தின் பிரேமையில் உள்ளது

தந்தை வங்கியில் பணம் சேர்க்கிறான். அதன் வட்டி தனக்குப் பின் மகனுக்குக் கிடைக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்கிறான். அது போல் புத்தி பிறழியவனுக்கு குறைந்த பக்ஷம் இறுதி சமயத்தில் நல்லறிவாகிய வட்டி

Koviloor Digital Library

கிடைப்பதற்காக நிறைய முதல் (பணம்) ஸ்ரீ ராம நாம வங்கியில் சேர்த்து வைத்திருக்கிறோம். மனிதன் எத்தனை பிறழிய புத்தியுடையவனாகி விட்டான். அவன் வங்கிக்கு அருகில் வந்தால் அவனிடம் மாறுதல் ஏற்பட வேண்டும். குறைந்த பக்ஷம் ஒரு சமயம் அங்கு வந்தால் நல்லவனாகி இறப்பான். கர்வம் பற்றிய விஷயமில்லை. ஆனால் வங்கியின் மகிமை ஒரு விஷயத்தில் உள்ளது என்றால் அது நாமப் பிரேமையில் இருக்கிறது. ராமன் எவ்வளவு தயாளு. அவன் நாமம் பரவ வேண்டும், அதனால் நாம் அவன் பெயரில் கடை தொடங்கினோம். முதலில் நமக்கு பொருள் பொருந்தாது என்று தோன்றியது. ஆனால் ராமன் மிகவும் க்ருபை செய்தான். ஏராளமானோர் நாம ஸ்மரணம் செய்யலாயினர்.

- யார் பகவானுடையவன் என்று அழைக்கப் படுகிறானோ, அவனுக்கு நாமத்திடம் பிரேமை இருக்க வேண்டும்
- நாமத்தில் எளிய தன்மை வருவதே 'அஜபாஜப' மாகும்
- நாமத்தின் ஆனந்தத்தின் அதிர்ச்சி வந்ததுமே மனிதன் தன்னைத் தானே மறந்து விடுவான், உலகத்தையும் மறந்து விடுவான்
- சுகம் எதில் இருக்கிறது? சுகம் புரிந்து கொள்வதில் இருக்கிறது, பகவானுடையவனாக இருப்பது என்னும் கொள்கை அத்தனை சத்தியமானது
- நாமமும் பிரேமையும் இரட்டைக் குழந்தைகளாகும்
- சுகம் விஷயத்தில் இல்லை, ஆத்மாவில் இருக்கிறது, ஆத்மா சுக ரூபமானது
- சரீரத்தை பகவத் ப்ராப்திக்காகவே சமாளிப்போம்
- நாமம் அந்தரங்கத்தில் பிரவேசித்ததுமே சரீரம் மறந்து விடுகிறது. பகவான் யார் என்று தானாகத் தெரிகிறது
- கர்வப்படோம்–நிந்தை செய்யோம். குற்றம் கூறுவதும் சொல்வதும் (பார்ப்பதும்) ஹீனத் தன்மையின் லக்ஷணமாகும். ராமன் வைத்திருப்பதில் சந்தோஷப் படுவோம். பகவான் என்ன அளித்துள்ளார் என்று பார்ப்போம். அதில் சமாதானம் அடைவோம்.
- கர்ம மார்க்கத்தில் செல்லும் போது நாமம் மிகவும் அவசியமாகிறது
- நாமத்திற்காக நாமம் கூறினால் அதில் ராமன் இருக்கிறான் என்பது அவசியம் புரியும்
- யோகத்தால் கைகூடுவது நாமத்தால் கைகூடுகிறது
- யாருக்கு நாமத்திடம் பிரேமை உண்டாகி விட்டதோ அவனுக்கு பகவானுடைய தரிசனம் ஆகிவிட்டது

- பகவத் சேவை தூய பாவனையாலேயே நடக்க முடியும்
- பரமார்த்தம் எவ்வளவு தான் கடினமாக இருந்தாலும் நாமத்தால் அது நன்கு சாத்தியமாகி விடுகிறது
- நாமம் கூறும் போது மனதில் பகவான் மட்டுமே இருக்க வேண்டும்
- வாயில் அகண்ட ராம நாமம், உள்ளே இருக்கட்டும் அனுசந்தானம், இதையே பரமார்த்தம் என்று அறிந்து கொள்வோம்
- நாம ஸ்மரணத்தில் இருப்பவனுக்கு உண்மையான தரிசனம் உண்டாகிறது
- பகவானிடம் என்ன கேட்பது? 'உன் அன்பை எனக்கு கொடு'–இதை மட்டுமே அவரிடம் கேட்போம்
- நாமமே பகவானை சந்திக்கச் செய்யும்
- நாம் கேட்பதை பகவான் கொடுக்கத் தொடங்கினால் அவனுக்கு 24 மணி நேரமும் கஷ்டப்பட வேண்டியுள்ளது. இத்தனை செய்தும் நாம் கேட்பது முடிவுறாமல் இருந்து விடுகிறது
- நான் யாருமில்லை. எல்லாம் ராமனே. நான் ராமனுடையவன் என்னும் பாவனையில் ஆனந்தமாவோம்
- கவலை செய்வதென்றால் நாமத்திற்கு கவலைப்படு. நாமத்திற்கு கவலைப்படு. பின் கவலைப் படுவதற்காக முறையே (சந்தர்ப்பமே) வராது.
- வேதாந்தத்தை ஒவ்வொரு நாளும் நடத்தையில் கொண்டு வர வேண்டும்
- ஒவ்வொரு வேத மந்திரத்தின் தொடக்கத்திலும் 'ஹரி ஓம்' என்றுள்ளது. அது நாமமேயாகும்
- நாமத்தில் உள்ளத்தை லயிக்க (மூழ்க) வைப்பதே சத்தியமாகும்
- உடலை விதியின் மீது விட்டுவிடுவோம். மனதை ராமனிடம் மூழ்கச் செய்வோம்
- பகவானை இல்லறம் அல்லது உலகிற்காக சாதனையாக்க வேண்டாம்
- ஞானியாகி நாம ஸ்மரணம் செய்தலும் பக்தனாகி நாம ஸ்மரணம் செய்தலும் ஒரே விஷயமாகும். இரண்டிலும் பகவத் பிரேமை முக்கியமானது
- எந்த சந்தர்ப்பத்திலும் நாமத்தை விடோம்
- நாமம் கூறி கூறி அதில், நாம் நாமம் கூறுகிறோம் என்பது கூட மறந்து விடும்படி ஆழ்ந்து விடுவோம்
- நாமம், ரூபத்தைவிட அதிகம் வியாபித்தது
- எது வேண்டுமானாலும் செய்வோம். நாமத்தைத் தவிர வேறு உபாயமில்லாத போது அதைக் கூறுவதில் தாமதமோ, தட்டிக் கழித்தலோ எதற்கு?

Koviloor Digital Library

- பகவானின் நினைவே ஒவ்வொரு சாதனையின் ரகசியமாகும்
- நாமத்தின் எல்லா ஐயங்களும் நாமம் கூறுவதால் தானாக அழிந்து விடுகின்றன. மனம் ஸ்வாதீனமாவதற்கு உள் மனதோடு நாமம் கூறுவோம்
- நாமம் சுரங்கத்தைப் போன்றது. அது விகாரம் என்னும் மிகப் பெரிய பாறைகளை உடைத்து விடுகிறது
- நம்முடைய பிரேமையை நாம் இல்லறத்தில் அல்லது உலகத்தில் வைத்துள்ளோம், அதை ராம நாமத்திடம் வைக்க வேண்டும்
- வைதீக கர்மத்தோடு பகவானின் நாமத்தைக் கூற வேண்டும்
  வைதீக கர்மங்களுக்கு ஆகார, விகார பந்தனம் உண்டு, பகவன் நாமத்திற்கு அவை கிடையாது
- எல்லாம் ராமனுடையது என்று கருதுவதின் பொருள் ராமனுக்கு எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்தல் என்பதாகும். "இனி நான் ஏதும் கேட்க வேண்டாம். நான் இப்போது உனக்காகவே வாழ்கிறேன். என் உடலை நான் உனக்கு அர்ப்பணித்து விட்டேன். இனி ஒரே ஒரு விஷயம், எனக்கு அகண்ட நாம ஸ்மரணம் அளி. ஏ ராமா! நீ என்ன செய்கிறாயோ அதில் என் சந்தோஷத்தை நிறைவேற்று. என் உள்ளம் உன்னை மறக்காதிருக்க அருள் செய்."
  நாமத்தின் சங்கத்தில் கிடைக்கும் (செயல்) விவகாரம் நம்மை பகவத் சேவையிடம் அழைத்துச் செல்கிறது.
- நாம ஜபத்தின் முடிவு என்பது அக்ஞானம்; நாமம் பழைமையானது, காலத்திற்கு அப்பாற்பட்டது. அதன் பெருமையை அறிவது மிகவும் கடினம். பகவானுக்கு மிகவும் பிடித்தமானது ஒன்று உண்டானால் அது அவருடைய நாமம் தான். அதைக் கூறினால் நம்முடையவனாகி விடுவான். பகவான் நாமமின்றி இருப்பதில்லை. திரிவேணி சங்கம் ஒன்று உண்டானால் அது பகவான், பக்தன், நாமம். பகவான் இருக்குமிடத்தில் ராமன் இருக்கிறான், பக்தனிருக்குமிடத்தில் நாமமும் பகவானும் இருக்கின்றனர். இறுதி மூச்சு நாமத்தில் வெளியே வரட்டும். இதற்கு இப்போதிலிருந்து எப்போதும் நாமத்தில் இருக்க முயற்சி செய்வோம்.

● ● ● ●

ராம ராம ராம ராம

Koviloor Digital Library

பகவன் நாமத்தினால்

துயர் தீரும்;
கோரியது ஆராய்ந்து அருளப்படும்;
பேதம் விலகும்;
சமத்துவம் நிஜமாகும்;
திறமை கூடும்;
விநயம் வளரும்;
யாரையும் விரும்புவீர்கள்;
யாவராலும் விரும்பப்படுவீர்கள்;
பொறாமை போகும்;
அகந்தை அகலும்;
திருப்தி அடைவீர்கள்;
மன அமைதி கிட்டும்;
ப்ரேமை பெருகும்;

உலகம் க்ஷேமமாயிருக்கும்

எங்கள் ப்ரார்த்தனை

பகவன் நாமத்திற்காக
பகவன் நாமத்திடம்
பகவன் நாமத்தினால்
பகவன் நாமத்தையே
அருள ப்ரார்த்தனை

Koviloor Digital Library

நாம இயக்கம் நம் இயக்கம்

நாம பஜார்

அரசியல் இயக்கம் அல்ல
மத இயக்கம் அல்ல
ஜாதி இயக்கம் அல்ல
ஸம்ப்ரதாய இயக்கம் அல்ல

ஆசார,தர்ம,வைதீக, ஆகம,
ஸம்ப்ரதாய ப்ரசாரங்களை
நாங்கள் செய்வதில்லை.

KOVILOOR AN... LIBRARY, KOV...
A. No. 4464

இவைகளால் அடையப்படும்
இறைநாமத்தையே
நாங்கள்
ப்ரசாரம் செய்கிறோம்.

நாம பிச்சை	எங்கள் இச்சை	நாம பெட்டகம்	எங்கள் கோஷ்டம்
நாம பிரச்சாரம்	எங்கள் சாரம்	நாம ஊர்வலம்	எங்கள் கோலாகலம்
நாம ஸித்தாந்தம்	எங்கள் வேதாந்தம்	நாம ஸன்னதி	எங்கள் மாநிதி
நாம பேச்சு	எங்கள் மூச்சு	நாம தர்ஶனம்	எங்கள் நிரந்தரம்
நாம லேகனம்	எங்கள் கவனம்	நாம ஒழுக்கம்	எங்கள் பழக்கம்
நாம சிந்தனை	எங்கள் வந்தனை	நாம முழக்கம்	எங்கள் வழக்கம்
நாம ஸேகரம்	எங்கள் சிகரம்	நாம உணர்வு	எங்கள் உணவு
நாம பாதுகாப்பு	எங்கள் மதிப்பு	நாம ஆசாரம்	எங்கள் கலாசாரம்
நாம அலங்காரம்	எங்கள் ச்ருங்காரம்	நாம வழி	எங்கள் மொழி
நாம யாத்திரை	ஏங்கள் முத்திரை	நாம கோஷம்	எங்கள் க்ஷேமம்
நாம ப்ரதிஷ்டை	எங்கள் நிஷ்டை	நாம ஜீவனம்	எங்கள் ஜீவன்

நாமம் எழுதுவீர் / எழுதுவிப்பீர் / ஸேகரிப்பீர் **நாம ப்ரதிஷ்டை** செய்வீர் / செய்விப்பீர் / நிதியளிப்பீர் **நாமத்தால்** நீவீர் / பிறரை / உலகம் **க்ஷேமம்** அடைவீர் / அடைவிப்பீர் / அடையட்டும்




எல்லோரையும் நல்லோராக்கும்...

ஸ்ரீ ராம நாம வங்கி

சுதந்திரமாக நாமப்பணிகள் செய்து வரும் நாம அடிமைகள்

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ் | அன்னதான ஸமாஜம்

'RAMA MANTHIRAM', No. 2/3, Vinayagam Street, West Mambalam, Chennai - 600 033.
Ph :- 044 24893736/35 Cell :- 9445693295.Website : www.namalayam.org e-mail:- ramamanthiram@gmail.com